# பாலியர் நேசன்.



நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

உம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௫ம் ௵. தை ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை, ௧.

## பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | | சி. | ௧: |
| ஒரேமுறையில் ௧௦ | " | " | " | ௯ |
| ௨௦ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௦ | " | " | " | ௪௦ |
| ௧௦௦ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

## SUBSCRIPTIONS AND DONATIONS.

| | s. d. | | s. d. |
|---|---|---|---|
| 1864 | | Mr. P. Marian | 10 |
| James Tappan | 1 0 | 1865 | |
| P. R. Pullinayagam | 0 6 | C. R. Pullinayagam | 1 6 |
| Revd. J. Hensman | 1 0 | Navasivayam | 1 0 |
| Mr. J. Niles | - 1 0 | John Valu | - 1 0 |
| " J. Winn | - 1 0 | க யோசேப்பு | - 1 0 |
| " C. Wardsworth | 1 0 | மா. தானியேல் | - 1 0 |
| Tillepally Y C.A. | 5 0 | Mr. John | 1 0 |
| Batticotta Y.C: A. | 12 0 | | |

## வருஷப்பிறப்பு.

வருஷப்பிறப்பென்ற வார்த்தை சகலருக்கும் இன்பத்தைக் கொடுக்கின்றது. பிரதானமாகப் பிள்ளைகளுக்கு வருஷப்பிறப்பு கொண்டாட்டமானநாள். பிள்ளைகளே, பழையவருஷத்தில் உங்கள் காரியங்கள் எப்படி? உங்கள் கணக்கு சரிகணக்காகச் சென்றவருஷத்தில் முடிந்ததா? இனி ௲௮௱௬௰௪ம் ஆண்டை உங்கள் சீவியநாளில் ஒருபொழுதுங் காணமாட்டீர்கள். பழைய வருஷத்தை நாம் சரியாகக் கைக்கொண்டு நடந்தால் புதுவருஷம் நமக்குச் சந்தோஷந்தான். புதுவருஷத்தில் நாம்செய்யவேண்டிய கடமைகள் மிகுதி. சென்றவருஷத்தை அசட்டைபண்ணினதுபோல இவ்வருஷத்தையும் அசட்டைபண்ணாதபடி எச்சரிக்கையாயிருப்பீர்களாக. போனவருஷத்தில் கிறிஸ்துவுக்கென்று நீங்கள் சீவியாதிருந்தால் இவ்வருஷத்தின் முதல்மாதம் முதல்த்திகதியில் தானே கிறிஸ்துவுக்கென்று உங்களை ஒப்புக்கொடுங்கள். ௲௮௱௬௰௫ம் ஆண்டைக் காணும்படி உங்களைக் காப்பாற்றிவந்த கடவுளுக்கு மனப்பூர்த்தியுடன் ஸ்தோத்திரஞ் செலுத்துங்கள். இவ்வருஷம் உங்களுக்குச் சந்தோஷமான வருஷமாயிருக்கட்டும். அநேகருக்கு இரட்சிப்பின் சுவிசேஷவாக்கை நீங்கள் கூறும் வருஷமாயிருக்கட்டும். உங்களுடன் கூடச் சகவாசம்பண்ணின பிள்ளைகளிற் சிலர் இப்பொழுது எங்கே? அவர்கள் தேவனுடைய சமுகத்திற் தங்கள் கணக்கை ஒப்புவிக்கும்படி போய்விட்டார்கள். ஆகையால் இந்தவருஷத்தில் நீங்களும் சாகக்கூடும் என்பதை மறந்துவிடாதேயுங்கள்.

## விஸ்க் அம்மாள்.

இந்த அம்மாள் ௲௮௱௯ம் ஆண்டு அமெரிக்காக்கண்டத்திலுள்ள மாசேசற்சு மாகாணத்திலே பிறந்தார். பாலிய வயதிலேயே தன் பாவத்தைக்குறித்து உணர்ந்து கிறிஸ்து இரட்சகருடைய அடியவளாக வேண்டுமென்ற நிருணயம்பண்ணினதன்றி, பதினைந்தவயதில் கிறிஸ்த சபையுடன் சேர்ந்து, வரவரக் கிருபையிலும் பத்தியிலும் அதிகரித்துவந்தார். சிலகாலமாக ஓர்பெண் வித்தியாசாலையில் உபாத்தியாயியாயிருக்கையில் பிறதேசங்களிலுள்ள அஞ்ஞானிகளுடைய நிலைபரத்தைப்பற்றிக் கேள்விப்பட்டபொழுது அவர்களுக்கு இரட்சிப்பின்வழியைக்கூறுவது தனது கடமையென்றுணர்ந்ததினால் ௲௮௱[illegible]ம் ஆண்டு தனது சென்மதேசத்தைவிட்டு ஊருமியா என்னுமிடத்தில் வந்துசேர்ந்து ஏறக்குறைய ௧௪ வருஷம் அவ்விடத்தில் விசேஷமாய்ப் பெண் சனங்களுக்காக அதிகம் பிரயாசப்பட்டு ஒரு பெண்பாடசாலையையும் ஸ்தாபித்தார். இப்பாடசாலையே ௲௮௱[illegible]ம் ஆண்டு அவ்விடத்திலுண்டான மார்க்க எழுப்புதலுக்கு அஸ்திபாரமாயிருந்தது. அதிற்படித்த பிள்ளைகள் இவரைத் தங்கள் மாதாவென்று சொல்லிவருவார்கள். அம்மாளும் அவர்களைத் தனது பிள்ளைகளாகவே நடத்திவந்தார். சிறிது சமயங்களில் அவர்களுடைய கழுத்தில் தனது கைகளைப்போட்டு அல்லது அவர்கள் கையைத் தனதுகையினாற்பிடித்து அனேகமாக அவர்களைத் தனது அறைக்குள் அழைத்து அவர்களுடன் பேசிச் செபம்பண்ணிவருவார். சகலருக்குந் தயவுஞ் சாந்தமுமான குணத்தைக் காண்பித்து அவர்களுடைய ஆத்மா இரட்சிக்கப்பட வேண்டுமென்ற வாஞ்சையுடனே இரவும்பகலும் பிரயாசப்பட்டு, ௲௮௱௬௰௪ம் ஆண்டு சுகவீனத்தினிமித்தம் அமெரிக்காவுக்குப்போக அச்சுகவீனம் அதிகப்பட்டதினால் சென்ற ஆடிமாசம் தன் சிநேகிதர் நடுவே ஆறுதலுடையவராய் மரணமடைந்தார். இந்த அம்மாள் அமெரிக்காவுக்குப் போகப் புறப்பட்ட சமையத்தில் ஊருமியாவிலுள்ள ஸ்திரிசனங்களுக்குள்ளுங் குழந்தைகளுக்குள்ளுமுண்டான கலக்கங் கொஞ்சமல்ல. அவர்கள் அவருடனே கடைசியாகப்பண்ணின பிரார்த்தனையின் பின்வரும் மொழிப்பு அவரில் அவர்கள் எவ்வளவு அன்புள்ளவர்களாய் இருந்தார்களென்பதை விளக்குகின்றது. அதாவது, "அவருடைய தேகம் அவர் பெற்றாருடைய மண்ணுடன் சேராமல் அவர் பிள்ளைகளாகிய எங்கள் மண்ணுடன் சேர்ந்து எக்காளமூதப்படும்பொழுது எங்களுடன் எழும்பி நித்தியகாலமும் எங்களுடனே இருக்கவேண்டும்" என்பதே. இவர் அமெரிக்காவுக்குப்போய்த் தனது மரணகாலம் வரைக்கும் கிறிஸ்துவின் மகிமைக்காகப் பலவிதமாயும் பிரயாசப்பட்டார். இவ்விதமாகப் பிரயாசப்பட்ட இந்த அம்மாள் தனது பிரயாசத்துக்கேற்ற பலனை இப்பொழுதுபெற்று அனுபவிக்கிறாரென்பதற்குச் சந்தேகமில்லை. பிள்ளைகளே, நீங்களும் இம்மையிலே கிறிஸ்துவுக்காகப் பிரயாசப்படுவீர்களானால் மறுமையிலே கிறிஸ்துவினால் பலனைப்பெற்று அனுபவிப்பீர்கள்.

பாலியர்நேசனின் கையொப்பக்காரருக்குச் சகலநன்மையும் உண்டாவதாக.

பிரியசிநேகிதரே,

இந்த இரண்டாம்புத்தகத்தின் முதலாம் சங்கியை உங்கள் கையில் எட்டினவுடன் நீங்களும் எங்களுக்கு உதவிசெய்து இந்தப் பத்திரத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். பாலியருக்கும் வாலிபருக்குந் தகுந்ததும் பிரயோசனமுமான சிறிது காரியங்களை மாதந்தோறும் அறிவிக்கும் நிமித்தமாகவே இப்பத்திரத்தை ஆரம்பித்தோம். இந்நோக்கத்தை நிறைவேற்றச் சென்றவருஷத்தில் தேண்டினோம். இவ்வருஷத்திலும் இப்பத்திரம் கூடிய அளவு பிருதியாகப் பரம்பும்படி நம்மாலானமட்டு அதிகம் நயப்பும் பலனுமான காரியங்களை அச்சிடுவித்துத் தரவிருக்கிறோம். வாசிக்கத் தெரிந்திருக்கும் ஒவ்வொரு வீட்டிலும் இப்பத்திரிகை இருக்கும்படி விரும்புகிறோம். இது நயப்புள்ள பத்திரிகையாவதற்கு உங்களாலானதைச் செய்யுங்கள். ஒவ்வொருதரும் தன்தன் கையொப்பத்துடன் இன்னும் இரண்டுமூன்று அல்லது மேற்பட்ட கையொப்பங்களைச் சேர்த்து அனுப்ப முயலுவீர்களாக. உங்கள் பத்திரிகைகளை மறுபேருக்குக் கொடுத்து வாசிக்கும்படிசெய்து அனேக கையொப்பக்காரரைச் சேர்த்து அனுப்புங்கள். பிள்ளைகளுக்கு உபயோகமானவைகளைக்குறித்து ஒவ்வொருதரும் சிறுச்சிறுக் காரியங்களைத் தருணங்கிடைத்த வேளைகளில் எழுதியனுப்பக் கேட்கிறோம். இப்படிச்செய்வதினால் நீங்கள் பத்திரத்திற் கொண்டிருக்கும் அபிமானந் தெரியவரும். பிரிய சிநேகிதரே, நீங்கள் எங்களுக்கு உதவிசெய்யமாட்டீர்களா? உங்கள் சுயசாதியாரான பிள்ளைகளை அறிவில் உணர்த்தும்படிக்கும் தேற்றும்படிக்கும் இந்தப் பாலியர்நேசன் மூலமாக நீங்கள் உங்கள் நன்மைகளைச் செய்யமாட்டீர்களா? நீங்கள் அதி விருப்பத்துடன் கையிடும்படி தேவன் துணைசெய்வாராக.

இப்படிக்கு, பத்திராதிபர்.

## தீறு.

இது பெனிக்கேயாட்டிலுள்ள ஒரு பட்டினம். யெருசலேமுக்கு வடமேற்காய் ௯௰ மைல்தூரத்துக்கு அப்பாலிருக்கிறது. சீதோனுக்கு தென்மேற்காக ௨௰ அல்லது ௯௰ மைலுக்கு இப்பாலிருக்கிறது. இது அதிபூருவமானபட்டினம். கிறிஸ்துபிறக்க ௲௱ வருஷத்துக்கு முன் இது கட்டப்பட்டதென்று உத்தேசிக்கிறார்கள். நேபுகாத்நேசர் பதின்மூன்று வருஷமாக இதை முற்றிக்கைவிட்டு நாசப்படுத்தினார். பின் கட்டப்பட்ட தீறு முந்தினபட்டினத்துக்கு ஐந்துமைல் தூரத்திலிருக்கிறது சகரியா சொல்லிய தீர்க்கதரிசனத்தின்படி பின்தினதீறு அலக்ருசந்தர் என்பவனால் நெருப்பிடப்பட்டு அழிக்கப்பட்டது. பிற்பாடு இது சற்றுத் திரோத்து ருரியாவுடனும், எகிப்துடனு

ம், உரோமருடனும், சரசேனஸ் என்பவர்களுடனும் இசைந்திருந்தும் ஈற்றில் எகிப்திலுள்ள மமிலூக்கெஸ் (Mamelukes) என்பவர்களால் தரைமட்டமாக்கப்பட்டது. இப்பொழுது அவ்விடத்தில் ஏறக்குறைய ௪௱ம் குடிசனமுண்டு.

ஒருகாலத்தில் இந்தியாதேசத்துடன் வர்த்தகம்நடத்தி அநேக ஏராளமான திரவியங்களை வருவித்திருந்த தீருநகரத்தின் மாட்சிமையும் அலங்காரமும் ஏசாயா ஏசேக்கியேலென்னும் தீர்க்கதரிசிகளினால் சொல்லப்பட்ட வாக்குகளின்படி சரியாக நிறைவேறினதென்று தற்காலப் பயணக்காரர் அறிக்கையிடுகிறார்கள்.

## அற்புதம்!!!

சிறிதுகாலத்துக்குமுன் மட்றிட் (Madrid) என்னும் இராசதானியிலிருக்கும் கன்னிமரியாளுக்கு என்று சங்கற்பிக்கப்பட்ட விலைபெற்ற ஒரு பொற்பாத்திரத்தை ஒரு யுத்தசேவகன் (Soldier) திருடினனென்பதாகப் பிடிக்கப்பட்டு மறியலில் அடைக்கப்பட்டிருந்தான். இந்தகாரியம் விசாரிக்கப்பட்டபொழுது யுத்தசேவகன் சொன்னது, தானும் தனது சமுசாரமும் வயிற்றுவளர்ப்புக்கு ஒன்றுமில்லாமல் இடைஞ்சற்பட்டபடியினால் பரிசுத்த கன்னிமரியாளை நோக்கி உனது சித்திரப்பட்டாடையும் மற்றும் உன்னைச்சூழ்ந்திருக்கும் விலைபெற்றகோடாகோடி திரவியங்களையும் பார்க்கையில், நான் ஒன்றுமில்லாதவனாக இருந்து முட்டுப்படுகிறேனே என்று பிரார்த்தித்த வேளையில் பரிசுத்தமாதா திருவுளமிரங்கிக் குனிந்து புன்முறுவல்கொண்டு இந்தப் பாத்திரத்தை எனக்கு எடுத்துத் தந்தா என்றான். அவ்வேளையில் நீதிபரும் மற்றும் நியாயசாஸ்திரிகளும் இதைக் கேட்டவுடன் பிரமித்து இது எப்பேர்ப்பட்ட அற்புதமாகவிருக்கிறது, இக்காரியத்தைத் திருச்சபை விசாரணைக்காரரிடம் ஒப்புவித்துப்போடவேண்டுமென்று ஒப்புவித்தார்கள். திருச்சபை விசாரணைக்காரர் யுத்தசேவகனுக்குப் பொற்பாத்திரத்தைக் கொடுத்து அவனுக்குச் சொன்னது இனிமேல் இப்படிக்கொத்த உதவியை எமது பரிசுத்த விக்கிரகங்கள் உனக்குச் செய்யக்கூடுமென்று காத்திராதே. பரிசுத்தமாதா உனக்கு ஈந்த பொற்பாத்திரத்துக்கு நன்றியறிதலாக நீ மௌனஞ்சாதிப்பதே அவளின் விருப்பம். இதைப்பற்றி ஒன்றும் பேசாதே என்று உறுதியாகக் கட்டளையிட்டு அவனை விட்டுவிட்டார்கள்.

## கோனாய்.

ஆட்டுக்கிடையை நாசப்படுத்தும் துஷ்டமிருகம் கோனாய். தான் மேற்கொண்டுபாய்ந்து பிடிக்கக்கூடிய எவ்வகைப் பிராணியையும் கோனாய் பதுங்கிப் பாய்ந்து அமர்த்தும். தான் தப்பிக்கொள்ள வழியில்லையென்று காணும்பொழுது மனிதரிலும் அரிதாகச்சாடும். அதின் உடல் நாயின் உடலிலும் இறுக்கமுள்ளது. நாய்க்குங் கோனாய்க்கும் நிராப்பகை.

பெரும்பாலுங் கோனாய்கள் திரண்டு கூட்டமாகச்சேர்ந்து தங்கள் இரைகளை மணந்து கவரும். கோனாய்கள் இரைகளைத் தேடப்போகும்போது அரைவட்டமாக வரிசையாகநின்று தங்கள் இரைகளைத் துரத்திக் கலைக்கும். அப்பொழுது தப்பிக்கொள்ள வழியில்லாததினால் செங்குத்து மலைகளில் உயர ஏறி தலைகீழாக அடியில் விழுங்கள். அவைகள் விழுந்து மாண்டதின்மேல் நாறிப் பிணமாகக் கிடக்கும்பொழுது இவைகள் அவைகளைப் பட்சிக்கும்.

கோனாய்களின் கொடுமையையும் காட்டுத்தன்மையையும் உவமித்துச் சத்தியவேதத்தில் பலவசனங்கள் காணப்படுகின்றன. “பென்யமீன் கோனாயைப்போலப் பீறுவான். காலையில் தன இரையைப் பட்சிப்பான். மாலையிற் கொள்ளையிடுவதைப் பங்கிடுவான்” என்று யாக்கோபு சொன்னார்.

புதியேற்பாட்டிலே கள்ளப்போதகரின் உபாயங்களையும் தந்திரங்களையுங் காட்டும்படி “ஆட்டின் வேஷத்தையும், பீறுகிற கோனாய்களின் உள்ளத்தையுமுடையவர்களாய், உங்களிடத்தில் வருகிற கள்ளத்தீர்க்கதரிசிகளைக்குறித்துச் சாவதானமாய் இருங்கள்” என்று சொல்லப்பட்டிருக்கிறது.

௲௮௱௨௧ம் ஆண்டில் உருசியாதேசத்தில் ௫௱௫ மைல் நீளமும் ௱௫ மைல் அகலமுமுள்ள ஒரு மாகாணத்தில் கோனாய்கள் நாசப்படுத்தின சீவபிராணிகளின் தொகையாவது, குதிரைகள் ௧,௮௪௪, பறவைகள் ௧,௨௪௯, மாடுகள் ௧,௭௦௭, கன்றுக்குட்டி ௭௯௯, செம்மறி ஆடு ௧௫,௧௮௨, செம்மறிஆட்டுக்குட்டி ௭௨௯, வெள்ளாடு ௨,௨௪௬, வெள்ளாட்டுக்குட்டி ௧௮௯, பன்றி ௪,௧௧௦, பன்றிக்குட்டி ௯௨௨, நாய் ௭௦௯, வாத்து ௱௭௯.

(இன்னும்வரும்.)

## மனமாயிருக்கிறார்.

ஒரு மாதாவுள்ள பிள்ளை மாதாவற்ற பிள்ளையைப்பார்த்து உனது துன்பதுயரங்களைப்பற்றிச் சொல்லும்படி உனக்கு மாதாவில்லையே, நீ என்னசெய்கிறாய்? என்றபொழுது என் மாதா மரிப்பதற்கு முன் தான் இருந்தாலும் இல்லாதிருந்தாலும் யேசுவிடம் போகச்சொன்னாள். ஆகையால் நான அவரிடம்போய் என் கவலைகளைச் சொல்லுவேனென்றான். அவரே என் மாதாவின் உற்றநண்பன். எனக்கும் அவர் உரித்தானர்.

மற்றவன் சொன்னது யேசுக்கிறிஸ்து பரமண்டலத்திலிருக்கிறார், அது மிகவுந் தூரம். அவ்விடத்தில் அவர் பார்க்கவேண்டிய காரியங்கள் பலவுண்டு. உனதுகாரியத்தைக் கவனிக்கும்படி அவர் தாமதிப்பாரென்று நான்நம்ப இடமில்லை என்றான்.

அதற்கு அனாதபிள்ளை சொன்னது, அதைப்பற்றி நான் ஒன்றும் அறியேன், அவர் எனது கவலைகளைக்கேட்க மனமாயிருக்கிறார் என்பது மாத்திரம் எனக்குத் தெரியும். அதுவே எனக்கு வேண்டியது என்றான்.

அனாதபிள்ளை சொன்னது சரி. பெற்றார் வாலிபர் முதலியோரைக் கேட்கும்படி தேவன் செவிசாய்ப்பதுபோல குழந்தை பாலர் முதலியோருடைய வாயிலிருந்து பிறப்பதையுங் கேட்கும்படி தேவன் செவிசாய்க்கிறார்.

இதைப் பிள்ளைகளே, நம்புகிறீர்களா? அப்படியானால் விசுவாசத்துடன் அவரிடம் போங்கள். அவர் தாம் சொல்லியபடி செய்வார்.



ஒட்டகம்.

பார்சுதேசத்தார் பிரயாணம்பண்ணும் விதத்தை இப்படங் காட்டுகின்றது. பெரும்பாலும் குதிரை, ஒட்டை முதலியவைகளில் ஏறிப் பயணம்பண்ணுவார்கள். இப்படத்திலுள்ள ஒட்டகத்தின் முதுகின்மேல் ஒரு பெட்டியிருக்கின்றது: இந்தப் பெட்டிக்குள் பெண்பிள்ளைகளிருந்து பிரயாணம்பண்ணுவார்கள். பெண்பிள்ளைகள் வெளிமேல் வருங்காலத்தில் ஒருவருங்காணாதபடி இவ்வகையான பெட்டிக்குள் வைக்கப்பட்டிருப்பார்கள், அல்லது முகத்தை மறைத்து முக்காடிட்டு வருவார்கள். பார்சுதேசத்தார் மகமதுமார்க்கத்தாராகவிருக்கிறார்கள். நெஸ்தோரியரென்று சொல்லப்படுங் கிறிஸ்தவர்களும் இத்தேசத்திலிருக்கிறார்கள்.

பார்சுதேசம் எங்கே?

அதின் இராசதானிக்கு என்னபேர்?

பிரியமான பாலியரே,

முன்னொரு சஞ்சிகையில் ஏழைக் காலேப்புப் பிரார்த்தனையில் உறுதியாயிருந்த திருத்தியாக்கப்பட்ட விதத்தைப்பற்றிச் சிலவற்றை எழுதினேன். அவனுக்கு ஆகாரப் பண்டபதார்த்தங்களை அனுப்பினவர் ஆரென்று தெரிவிக்கவில்லை. அவைகளை அனுப்பினவர் ஒரு வைத்தியர். அவர் ஒரு கிறிஸ்தவனல்ல ஒரு நாஸ்திகர். அவர் மனையாள் கிறிஸ்தவள். அவர் ஒருநாள் மலைச்சாரலிலே சவாரிபோகையில் தேவாராதனை நடத்தப்பட்ட ஒரு இடத்திற் சேர்ந்தார். அந்த ஆராதனையிலிருந்தவர்களில் ஒரு தரித்திரன் பிரசங்கியார் சொன்ன வேதவாக்கியங்கள் அனைத்தையும் தன் கையிலிருந்த சத்தியவேதத்தில் புரட்டிப் பார்த்து வாசித்ததை நூதனமாய்ப் பார்த்துக்கொண்டு நின்று கூட்டம் முடிந்தபின் அவனைக்கண்டு பிரசங்கத்தைப்பற்றி நூதனமாய் விசாரித்தார். அவனுடைய மறுமொழிகளினால் பிரமிப்படைந்தவராய் அவர் தன் வீட்டுக்குத் திரும்பிப்போய் ஒருக்காலும் அவனை மறவாமலிருந்தார். மழை அடைத்த கிழமை காலேப்புப் போசனத்திற்காகப் பிரார்த்தனைபண்ணின அன்றிரவு இந்த வைத்தியர் தன்வீட்டில் நித்திரைபண்ணிக்கொண்டிருக்கையில் “காலேப்புக்குப் போசனம் அனுப்பு” என்றொரு அசரீரி வாக்குப் பிறந்தது. அவர் திடுக்கிட்டெழுந்து அது என்னவோ என்று யோசித்துக்கொண்டு அரை உறக்கமாய்ப் படுத்திருந்தார். மறுபடியும் அவ்வார்த்தைகளே இரண்டுமுறை கேட்கப்பட்டன. அவர் உடனே எழுந்து தன் வேலைக்காரனை அழைத்துத் தன்பண்டகசாலைக்குப் போய் இரண்டு சாக்கு நிறையப் பலவகையான சாமான்களும் போட்டுத் தன் குதிரையின்மேலேற்றி வேலைக்காரனைப்பார்த்துச் சாமானைக் காலேப்புவீட்டுக்குக் கொண்டுபோய் இறக்கிப்போட்டுவரக் கட்டளையிட்டார். வேலைகாரனுக்கு வழிதெரியாது. குதிரையே வழிகாட்டிற்று. காலேப்பு இவைகளை அனுப்பினவர் ஆரென்று வேலைக்காரனிடத்தில் விசாரித்தான். தேவன்தான் இவைகளை அனுப்பினவரென்று வேலைக்காரன் சொல்லிப்போய்விட்டான்.

இப்படிக்கு, R.

## சீனப்பிள்ளைகள்.

சிறு குழந்தைகளை நேசியாதசாதி உலகத்திலில்லை. பிள்ளைகள் மரியாதையுள்ளவர்களாகவும் படிப்பிக்கப்படக் கூடியவர்களாகவும் நல்லவர்களாகவும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறவர்களாகவும் தங்கள் பெற்றாரையும் உற்றாரையுஞ் சந்தோஷிப்பிக்கிறவர்களாகவும் யேசுவானவரைப்போல ஞானத்தில் வளருகிறவர்களாகவும் மனுஷருடையவுந் தேவனுடையவும் தயவைத் தேடுகிறவர்களாகவும் மற்றவர்களுக்குநயப்பும் பிரயோசனமுமுள்ளவர்களாக வரும்படிதெண்டிக்கிறவர்களாகவும் இருப்பதைக் காண்கையில் அதிகமாக நேசிக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட இலட்சணமுள்ளவர்களாகும்படி அவர்களைப் பண்ணுவதென்ன? நமக்குத் தெரிந்தபடி தேவவாக்கினால் அவர்கள்போஷிக்கப்பட்டதே இதின் நியாயம். பலதருணங்களிலும் பெற்றார் முதன்முதல் வேதவசனங்கள் அவர்கள் மனதிற் பதியும்படி செய்தார்கள். வீட்டிலும் தேவாலயத்திலும் ஞானத்தின் மார்க்கத்தைப் பற்றிப் படித்து அதுவே இன்பமும் சமாதானமுமுள்ளபாதையாகக் கண்டார்கள்.

ஆனால் இப்படிக்கொத்த சலாக்கியம் இலட்சக்கணக்கான பிள்ளைகளுக்கில்லை. அவர்களை இரட்சிப்புக்குப் புத்திசாலிகளாகப் பயிற்றும்படி சத்தியவேதம் அவர்களுக்கில்லை. சரியானபாதையில் நடத்தக்கூடிய உவாத்தியில்லை. இவர்கள் இருளில் வாசம்பண்ணுகிறவர்களாய் தேவனை அறியாதவர்களாய் விக்கிரகத் தொழும்பராய் பசாசினால் ஆளப்படுகிறவர்களாய் இருப்பதினால் அவர்கள்மேல் இரக்கங்கொள்ளாமலிருப்பவர்களார்? இப்பொழுது சொல்

லப்பட்ட காரியம் உண்மையோ அல்லவோ என்பதைப்புற்றி சீனதேசத்தின் பிள்ளைகளைப் பற்றி ஆராய்வோமாக.

சீனதேசத்திலிருக்கிற ஒரு குருவின் மனைவி எழுதுகிறதாவது, சீனதேசத்தில் சனந்திரளாக இருக்கப்பட்ட பட்டினங்களிலாவது சந்தடியில்லாத கிராமங்களிலாவது உலாவிவருகையில் இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ள பிள்ளைகளைப் போலவே இத்தேசப்பிள்ளைகளும் தெருக்களில் நின்று விளையாடுவார்கள். கடைகளில் நடமாடி விளையாடுவார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளை இங்கிலிசகாரரைப் போல முத்தமிடாமல் அவர்களின் முகத்தை மணந்து மிகவும் நல்வாசனையென்று சொல்லுவார்கள்.

ஒரு பிள்ளையின் செனனதினம் விசேஷமாக ஆண் குழந்தையின் செனன நாள் மிகவுங் களிப்பான நாளாகவிருக்கும். குழந்தையின் பெற்றோர் தங்களினத்தவர்களுக்கு பழவர்க்கங்களையும் வர்ணமாக்கப்பட்ட முட்டைகளையும் அனுப்புவார்கள். அவர்கள் அதற்குப் பதிலாகப் பண்ணிகாரங்களையும் கனிவர்க்கங்களையும் அனுப்புவார்கள். பல நியாயங்களைக் கொண்டு சீனர் புத்திரியைப் பெறுவதிலும் புத்திரனைப்பெறுவதே பாக்கியமென்றெண்ணுகிறார்கள். ஏனெனில் புத்திரிகள் விவாகம்பண்ணினதின்மேல் தங்கள் பெற்றோருக்கு யாதொரு ஊழியஞ்செய்யக் கடமைப்பட்டவர்களல்ல. தாங்கள் அவர்களை வளர்ப்பதற்குச் செலவிட்ட பணத்துக்கு யாதொரு நயமும் அவர்களாலுடையவில்லை. ஆனால் புத்திரர் விவாகம் பண்ணும்பொழுது அவர்களின் மனைவிமார் மாமிமாரின் வேலைக்கேட்டு நடப்பார்கள். அவர்களே வீட்டுக்காரியங்களை நடத்துகிறவர்களாக இருக்கிறார்கள். புத்திரன் மாத்திரமே பெற்றோரின் சாச்சடங்கை நிறைவேற்றுவான். இச்சடங்குசெய்வதே அவர்களுக்குள் விசேஷித்த காரியம். சீனப்பிள்ளைகள் ஒருமாதக்குழந்தையாகும்பொழுது அவைகளின்தலைமயிரைச்சிரைப்பார்கள். அது ஒரு ஆண்குழந்தையாகில் பெற்றோர் இனத்தவர்களை அழைத்து விருந்திட்டு அதற்கு நாமஞ் சூட்டுவார்கள். பெண்பிள்ளைகளுக்கு இந்நாமம் விவாககாலமட்டும் வழங்கப்படும். ஆண்குழந்தைகளைப் பள்ளிக்குவைக்கும்பொழுது மறுபேர்சொல்லி அழைப்பார்கள். பிள்ளைகளுக்கு முதல்வைக்கப்படும்பேர் செல்லப்பேராக "முத்து, சமாதானம், செவ்வந்தி, தங்கம்" என்னும் பேர்கள்போல அல்லது மூத்ததம்பி, நடுவிற்றம்பி, இளையதம்பி, சின்னத்தம்பி என்னும் பேர்கள்போல எத்தனையாம் பிள்ளையென்று காண்பிக்கிறதாகவிருக்கும்.

(இன்னும்வரும்.)

## சாதுவானஉத்தரம் கோபத்தை ஆற்றும்.

பயபத்தியுள்ள ஒருமனிதனின் குதிரை கைதப்பி வெளியே தெருவில் நின்றது. அதை அடுத்த வீட்டுக்காரன் கட்டாக்காலியாகத் திரியும் விலங்குகளை அடைத்துவைக்கும் பட்டியில் பிடித்துக்கொண்டுபோய் விட்டான். உடையவன் தனது குதிரையைத் தேடிவருவதை இவன் கண்டு சொன்னது, இன்னும் உனது குதிரையை இவ்விதமாகக் கட்டாக்காலியாகக் காண்பேனாகில் மறுபடியும் அதைப்பிடித்து அப்பட்டியில் கொண்டுபோய் விடுவேனென்றான். அப்பொழுது தேவபத்தியுள்ள மனிதன் அயலகத்தானை நோக்கி, என் சினேகிதனே, கொஞ்சநாளுக்குமுன் உமதுமாடுகள் இராத்திரிகாலத்தில் எனது தோட்டத்தில்நின்று புல்லுமெய்ந்ததைக் கண்டு அவைகளைத் துரத்தி உமது வளவுக்குள்விட்டுப் படலையைச் சாத்திவிட்டேன். இனிமேலும் அப்படிக்கண்டால் அப்படியே செய்வேன் என்றார்.

இவ்விதவார்த்தையை அயலகத்தான் கேட்டவுடன் மனதிற் குற்றுண்டவனாய் தானேபோய் அந்தக் குதிரைக்காகப் பட்டிக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைத் தானே இறுத்து குதிரையைச் சாய்த்துக்கொண்டுவந்து கொடுத்தான்.



அருமையானபிள்ளைகளே,

இற்றைக்கு ஏறக்குறைய ௨௭௦௦ வருஷங்களின்முன் பலஸ்தீனுதேசத்தின் கிழக்குப்பகுதியில், கிலியாத்தென்ற ஊரைச்சார்ந்த, திஷ்பி என்ற நகரத்தானாகிய இலீசா என்னுமொரு தீர்க்கதரிசி யிருந்தான். இவன் இஸ்ரவேலின் இராசாவாகிய ஆகாப்பின் காலத்தில், விக்கிரகாராதனையை விசேஷமாய்ப் பாகாலின் வணக்கத்தை, நிர்மூலமாக்கும்படி தேவனால்எழுப்பப்பட்டவன். ஆகாப்பின்மனைவியாகிய யேசபேல், இந்தத் தீர்க்கதரிசியைக் கொடிய பகையாய்ப் பகைத்தாள். இவன் ஆகாப்பின் முற்பட்டுச் சொன்ன முதல்வாக்கு, இஸ்ரவேலின் தேவன் நித்தியரானால் இந்த வருஷங்களில் என் வாக்கினாலன்றி மழையும் பனியும் பெய்யாதிருக்குமென்று சொன்னான். அப்படியே மூன்றுவருஷமும், ஆறுமாசமும் மழையில்லாதிருந்தது. இவ்வாக்கைச் சொன்னவுடனே தேவனிட்ட கட்டளைப்படி இலீசா தப்பிஓடிக் கேரீத் ஆற்றினிடத்திலிருந்தான். அவ்விடத்திலிருக்கையில் அவனுக்குப் போசனமென்னவென்று நீங்கள் ௧. இராசா. ௧௭ம் அதிகாரத்தில் வாசிப்பீர்களாக. அற்புதமானவிதமாய்ப் போஷிக்கப்பட்டான். மேலே நீங்கள் இந்தப்படத்திற் காண்கிறபடி, காலையிலும், மாலையிலும், தேவனுடைய கட்டளைப்படியே காகங்கள் அவனுக்கு உணவு கொண்டுவந்து கொடுத்தன. அந்த உணவைப் பொசித்து, ஆற்றின் நீரைப் பானம்பண்ணினான். சிலநாட் சென்றபின் மழையில்லாதபடியினால் ஆறு வற்றிப்போனது. அப்போ தேவன் அவனை நோக்கி, நீ எழுந்து சீதோன் தேசத்தைச்சேர்ந்த சாரிபாத்துருக்குப்போய் அங்கே தங்கு, அங்கே உன்னைத் தாபரிக்கும்படி ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேனென்றார். அந்தப்படி அவன் போனபோது, அந்த ஸ்திரி விறகு பொறுக்கிக்கொண்டு நின்றாள். இலீசா அவளிடம், பாகம்பண்ணும்படி கொஞ்சத்தண்ணீரும், ஒருதுண்டு அப்பமுங் கொண்டுவாவென்று கேட்க, அவன் "என்னிடத்தில் ஒரு அப்பமுமில்லை. பாத்திரத்தில் ஒருபிடிமாவும், கலசத்திலே கொஞ்ச எண்ணெயுமிருக்கின்றன" அதை எனக்கும், என் மகனுக்கும், நாங்கள் இறந்துபோகுமுன் புசிக்கும்படி ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டுவிறகுகளைப் பொறுக்குகிறேன் என்றாள். இலீசாவோ அவளை நோக்கி, நீ பயப்படவேண்டாம். போய் நான் சொன்னபடி, செய். முன்னே எனக்குக் கொஞ்சம் அப்பஞ் சுட்டுக்கொண்டுவா, பின்பு உனக்கும், உன் மகனுக்குஞ் சுட்டுக்கொள்ளலாம். யெகோவா பூமியின்மேல் மழை பெய்விக்கும்வரைக்கும், பாத்திரத்தின் மாக் குறைந்துபோகவும்மாட்டாது, கலசத்தின் எண்ணெய் ஒழிந்துபோகவும் மாட்டாதென்று இஸ்ரவேலின் தேவனாகிய யெகோவாச் சொல்லுகிறாரென்றான். அந்த ஸ்திரிபோய் இலீசாவின் சொற்படி எல்லாஞ்செய்தாள். அவளும் அவள் குடும்பத்தாரும் இலீசாவும் நெடுநாள் போசனம்பண்ணினார்கள். யெகோவா இலீசாவைக்கொண்டு சொல்லிய வாக்கின்படி, பஞ்சம் நீங்குமளவும் ஏறக்குறைய இரண்டுவருஷக்காலம், பாத்திரத்தின் மாக்குறைவுமில்லை, கலசத்தின் எண்ணெய் குறைவுமில்லை.

பிள்ளைகளே, யோக்கிநிலையின் வழியாய் தேவனை நம்புங்கள். பூலோகத்தாருக்கு வருகிற கஷ்டங்களெல்லாம் தேவனுடையகையிலிருப்பதால் இக்கட்டுப்படுங்காலத்தில், அவரே உங்களுக்கு உதவிசெய்வார், அந்தக் கைம்பெண்ணுக்கும், மகனுக்கும், இலீசாவுக்கும்அற்புதமான விதமாய் உணவைக் கட்டளையிட்டது போல, தேவனை நம்புகிற உங்களுக்கும், உதவிசெய்யும்படி அவர் காகங்களுக்கும் கட்டளையிடக்கூடும்.

(இன்னும்வரும்.)

## பார்வைக்கூழியம்.

ஒருசமக்காரன் தன் தோட்டம் கொத்தும்படி ஒரு கூலியாளைப்பிடித்து மிகத்தாழ்வாகக் கொத்து என்று கட்டளையிட்டான். சமக்காரன் அவ்விடத்தில் நிற்கும்பொழுது அவன் மிகவுந் தாழ்வாகக் கொத்துவான். சமக்காரன் அவனை விட்டு அப்புறம்போகும்போது மேலாகத்தாழ்வில்லாமற் கொத்துவான். தாழ்வில்லாமற் கொத்தினதினால் மேல்நிலம் வலித்து உரத்துக்கொண்டது. கொத்தி முடிந்தின்மேல் தோட்டம் முழுவதும் கொத்துப்பட்டதாகக் காணப்பட்டது. அத்தோட்டத்தில் இடவேண்டிய பயிரை இட்டான். அந்தப் பயிர்கள் சிறிது இடங்களிற் செழிப்பாகவும் சிறிதுஇடங்களில் செழிப்பின்மையுமாகவிருந்தது. இதினால் தோட்டங்கொத்தின கூலியாளின்தன்மை விளங்கினது. எசமான் நிற்கையிற் கொத்தின இடத்திலுள்ள பயிர்கள் செழிப்பாகவும், அவனில்லாதவேளையில் கொத்தின இடத்திலுள்ள பயிர்கள் செழிப்பின்மையுமாக இருந்ததினால் அவன் எப்பேர்க்கொத்த கூலிக்காரனென விளங்குகின்றது. பார்வைக்கூழியஞ்செய்வோன் அல்லவா?

இதுபோலவே மனமென்னும் தரையைச் செய்கைபண்ணுவோருமுண்டு. பெற்றோர், உவாத்திமார், உபதேசிமார், போதகர் என்பவர்கள் மனுஷனிலுள்ள இருதயத்தைச் செய்கைபண்ணுகிறார்கள். சிலர் செய்கைபண்ணவேண்டிய பிரகாரம் செய்கைபண்ணுகிறதில்லை. அவரவர்கள் செய்கைபண்ணினதன்மை கையுடன் தெரியவராது. உண்மையுடன் தங்கள் கடமைகளை நிறைவேற்றினோரும் உண்மையற்ற விதமாக நிறைவேற்றினோரும் பார்வைக்குச் சரியாயிருப்பார்கள். ஆனாற் காலமோ அவர்கள் செய்கைகளை வெளிப்படுத்தும். மாணாக்கன் காலஞ்செல்ல மனுஷனாகிறான். அப்பொழுது அவன் இளமையிற் பெற்றுக்கொண்ட கல்வி போதகம்என்பவைகளின்தன்மைவிளங்கும்.

ஆகையால் ஒவ்வொரு பெற்றோரும், உவாத்திமாரும், உபதேசிமாரும், போதகரும் முன்னுள்ள ஒரு இராசகுமாரத்தி தன் வேலைக்காரிக்குச் சொன்னதுபோலத் தேவனும் உங்களுக்குச் சொல்வதைக் கேளுங்கள். "நீ இந்தப் பிள்ளையை எடுத்துப்போய் எனக்கு வளர்த்துத்தா, நான் உனக்குச் சம்பளங் கொடுப்பேனென்றாள்" பிள்ளைகளின் மனதைச் செய்கைபண்ணுவோர்களே, தேவன் எப்பொழுதும் உங்களுடன் கூட நிற்கிறாரென்று நினைத்துக்கொள்ளுங்கள்.

## மனப்பாக்கியம்.

உலகத்திலுள்ள விவேகிகளும் அறிவாளிகளும் மனப்பாக்கியமுண்டாகும்படி உபாய வழிவகைகள் சொல்லுகிறார்கள். ஆனாற் தேவவாக்கினாலும் தேவாவியினாலும் நமக்குண்டாகும் போதனை தேவனுடன் இசைந்து அவர் சமீபத்தில் வசிப்பதே மனப்பாக்கியம் என்று அறிகிறோம். "யாக்கோபின் தேவனைத் தனக்குத் துணையாகக்கொண்டு தன் தேவனாகிய யெகோவாவில் நம்பிக்கை வைக்கிறவன் எவனோ அவனே வாழ்வுடையவன்." (சங். ௧௪௬. ௫.)

## சத்தியவேதக்கேள்வி.

எம் பாடம்.

௧. எப்பொழுதாகுதல் பறவைகள் மனுஷரைப் போஷிப்பித்ததுண்டா? ௧ இராசா. ௰எ: ௬—௯.

௨. தேவனுடைய உக்கிரத்தை மிருகங்கள் எப்பொழுதாகுதல்நிறைவேற்றினதுண்டா? ௧. இராசா. ௰௩: ௨௪. ௨. இரா. ௨௰: ௩௫, ௩௬. தானி. ௬: ௨௪. ௨. இரா. ௨: ௨௪.

௩. ஒரு சமையத்தில் ஒரு பிள்ளை படையில் நின்ற தனது சகோதரருக்குச் சில அப்பங்களையும்வறுத்த தானியத்தையும் கொண்டுபோனான். இவன் போனதினால் இவன் சகோதரரிருந்த பட்சத்தார் வெற்றியடைந்தார்கள். அதின் விபரம் இன்னதென்று சொல்லுவியா? ௧. சாமு. ௰எ: ௰௨—௫௪.

௪. ஆவாசம் எவ்விதபலகையினுற் கட்டப்பட்டது? யாத். ௨௬: ௰௫—௩௰.

௫. ஆவாசம் எத்தனைபங்காகப் பிரிக்கப்பட்டிருந்தது? யாத். ௨௬: ௩௩. எபி. ௯: ௨, ௩.

௬. பரிசுத்தஸ்தானத்திலிருந்த பொருள்களென்ன? யாத். ௨௬: ௩௫. ௨எ: ௯—அ. ௪௰: எபி ௯: ௨.

௭. பரிசுத்தஸ்தானத்துக்கும் மிகவும் பரிசுத்தஸ்தானத்துக்கும் எவ்விதமாகப் பிரிவிடப்பட்டிருந்தது. யாத். ௨௬: ௩௧—௩௩.

௮. திரைச்சீலைக்கு முன் என்னவிருந்தது? யாத். ௪௰: ௨௬.

---

## அறிவில் உலக்கைக்கோழுந்து.

ஓ! என்னிரு கண்மணியிலும் அதிகமான பாலியரே,

அறிவில் உலக்கைக்கொழுந்தென்னும் படியாத ஒரு மிலேச்சனும், அவன் கருத்துக்கிசைந்த பத்தினியும், பத்தினியின்றந்தையாகிய மாமனைக் கண்டு கேனகாலமாயிற்றென்று பிரயாணப்பட்டு அவர்களிருப்பிடஞ்சென்றார்கள் இவர்களிருவரின் வரவைக்கண்டு மகா மகிழ்வடைந்து சில பலகாரங்கள் செய்து பரிபாறும்படியாகத் தங்கள் அன்பைக் காட்டினார்கள், அறிவில் உலக்கைக்கொழுந்தென்னும்மிலேச்சன் வகைக்கொவ்வொன்றாகப் பொசித்து ஈற்றிற் கொழுக்கட்டையொன்றையெடுத்து மகா ஆச்சரியங்கொண்டு இதற்குத் தலையெதென்று சற்றுநேரந் தனது மேலான அறிவைச் செலுத்தியுங் காரியம் பலியாததைக்கண்டு விசனமுற்று இது பரமாகசியமென்று கருதிப் பொசித்தான். அது அம்மிலேச்சன் வாய்க்கு மகா மதுரமாயிருந்தன. இதைப்போல் தன் இருப்பிடஞ்சென்று செய்யவேண்டுமென்று வாஞ்சைகொண்டு பத்தினியைநோக்கி இதன் பெயரென்னவென்று வினவ அவள் கொழுக்கட்டையென்றாள். அப்பதத்தை மறவாமல் "கொடிக்காயிரம் விசை சொன்னான்" என்றதுபோல் அடிக்கொருவிசை உச்சரித்துக்கொண்டிருந்து மறுநாள் இருவரும் பிரயாணமாகி வரும் வழியிற் சற்றுப் பெரிய வாய்க்காலொன்றிருந்தன, அதைத் தாண்டும்பொருட்டுப் பின்வாங்கி அத்தேரிப்பாச்சா என்று ஆட்டுக்கடாபோற் பாய்ந்தான். அதனால் முன் உச்சரித்த அருமையான பதத்தை மறந்து, பின் சொல்லிய பதத்தை உச்சரித்துக்கொண்டு வீடுவந்து சேர்ந்தவுடன் அத்தேரிப்பாச்சா என்ற பணியாரஞ்செய்யென்று தன் பெண்டீரையேவினான். அதற்கவள் நீர் சொல்லிய பணியாரத்தைக் கண்டதுமில்லைக் கேட்டதுமில்லையென்றதற்குச் சினங்கொண்டு தடியாலடித்தான். அவ்வடியால் வீங்கிப் போனதைக்கண்டு ஐயோ! என் கர்த்தாவே, நாயகன் அடித்தஅடி கொழுக்கட்டைபோலவீங்கிற்றே யென்றோலமிட்டழுதாள். அதைக் கேட்டு ஓ! பெண்ணே இப்போது நீசொன்னதுதான் மறவாதேயென்றான். பின்னர் அம்மகாரி செய்துகொடுத்தானாம்.

ஆ! பாலியரே, இச் சிறிய கதையாற் கற்றுக்கொள்வதென்ன?

"இளமையிற்கல்" "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்றௌவையார் சொன்ன நீதிமொழிபோல், கல்வியை யிளமையிற் கற்றுக்கொண்டால் எப்போதேனுமோர் காரியங்களை மறவாமலெழுதிக்கொள்ளலாமல்லவோ? அவ்வாறு கல்லாவிட்டால் "சோம்பேறியின்இச்சை அவனைச் சாகப்பண்ணும்." வாக்கியம். ௨௧ அதி. ௨௫. என்றதுபோலேயோ! மோசம் போவீர்கள்.

இப்படிக்கு, சிங்கப்பூர் சராங்கோங்ரோட்டான். பாலியர் பிரியன்.

---

## தேவஸ்துதி.

தாழிசை.

ஆதியந்தமில்லாதா யுயரண்டபிண்டநிறைந்தாய்—ஆணொடுபெண்ணுமற்றதாயலியுமல்லாதரூபமாயக்

காதலொன்றுமில்லாததாய்ச் சிறு கருவினிற் கருவானதாய்க்—காரணமற்றதேவனாய் மிக்கக் கருணைவளருநாயனாய்ப்

போதகல்மிருவாசனாய்ப் பஞ்சபூதகாரணமூலனாய்ப்—பொருமைகொண்டநேயனாயுயர்மறைமையியுந் தேவனாய்

வேதமந்தமுமானதாமொரு ஏதமற்றநன்னீதமாய்—விளங்குஞ்சருவவல்லோனேவிதேயனின்றுயரைத் தீருமே.

கட்டளைக் கலித்துறை.

மண்ணோடுவிண்ணும் மதியாதமீன்கண்மதிதிரும்—*பண்ணோடுபெண்டம்பலசிவசெந்தம்படைத்தவனே—என்னோடுமிக்கவெழிலானபாயெடுத்துரைக்க—மண்ணோடு‡கேழிலிலையென்று நம்பி மதித்தனனே.

மகா கீர்த்திபொருந்திய, ராச ராச கெம்பீர உத்தண்ட விக்டோரியா என்னும் இராக்கினிபேரில். வெண்பா.

தன்னுவிபோலிர்தாணியோரைத்தாபரித்து
முன்னுவிசொன்னமொழிபோல—இன்னளிற்
செங்கோற்செலுத்து நற்சீர்மை விக்டோரியா
யோ
லெங்ஙனமுண்டோவிசை.

நீதிமொழி வெண்பா.

ஒருகாகமுட்டைக்கு ஓ! கோ! கோ! வென்றுக்
கருவானசெவியடைக்கக் கத்தும்—அருள்புவி
விற்
கல்லாருமற்பருக்கண்டவிடமெல்லாஞ்
சொல்வார்கடங்கட்டிரம்.
கல்லாதமூடன்கனகல்விகற்றவன்போற்
கல்லாரிடத்திற்கழறுவான்—வல்லான்
அறியாதபேயன்போலச்சங்களோடு
செறியைக்கைக்கொள்வான்நினை. வாக்கியம் ௧௨: ௨௩.

* பண் மகளிர்கூட்டம். ‡ கீழ் நரகம்.

இப்படிக்கு, சிங்கப்பூர்ச் சாரங்கோங்ரோட்டானுகிய பாலியர்பிரியன்.

---

## போடியனுங் கமலமும்.

மூவுலகத்திலும் முத்தொழில் நடத்தும் கர்த்தரின் சித்தத்துக்குரிய வித்தையின் பாத்திரசற்சனர் நேத்திரரான பாலியருக்கு மங்களமுண்டாவதாக.

ஆ! என்னருமைப்பாலியரே, விவேகபூஷணனென்றொரு பொடியன் தன் வறுமையாகாலத்தைப் போக்கிப் பெருமையடையும்பொருட்டு, உருமையான பசுக்களை காட்டுக்குருகான காட்டுப்புறங்களுக்கு ஓட்டிக்கொண்டுபோய், பசுமையான புல்மேயவிட்டு அங்ஙனம்வளர்ந்தோங்கிநின்ற வழகிய விருட்சத்தில் உளுக்கார்ந்து புல்லாங்குழலை மல்லிகை முதலான புட்பங்களிலூருந் தேனையுண்டு பாடுமொலியைப்போல சிலநேரம் தேவஸ்துதியான பாட்டுகள் பாடித் தன்னிருகண்ணை நாற்றிசையிலும் காட்டினான். அவ்வாறு நாட்டுங்கால் முத்துமுதல் நவமணிகளினொளிவைத்தாட்டும் இருளைச் சங்கரித்தாளும் அளவில்லாக் கிரணங்களையுடைய சூரியனைக்கண்டு மலரும் தாமரைப்புட்பங்கள் நிறைந்த தடாகமொன்றைக் கண்டு அடடா! இப்போல்கொத்த தடாகத்தில் நாம் நீந்தி விளையாடியதிலுண்டுபெட்டிருக்கும் புட்பங்களைக் கொய்து முகர்ந்து மகிழடையாமல் விருதாவில் அறிவில்லாக் குரங்கைப்போல மரத்திலிருப்பதேனென்று தனக்குள்ளே நினைத்து மரத்தைவிட்டிறங்கி விரைவாய்த் தடாகத்தருகிற் சென்றான். அத்தடாகத்திற் புட்பங்கள் சற்றுத் தலையிலிருந்தங் கிஞ்சித்து மஞ்சாமலிறங்கிநீந்துகையில் அநேகங் கொடிகள் அவையவங்களிற் பின்னவும் அதின் முட்கள் நச்சம்பிகள்போற் பாயவுமிடமாயிற்று. அவ்வாறு துன்பத்துக்காளாகியும் தம்பிரானைச் சிந்தையிற்கொண்டு முந்நகாடிய நாட்டத்தை முடித்து கரைக்கேறிப் பசுக்களை யோட்டி இருப்பிடம் சென்று மகிழடைந்திருந்தான்.

ஓ! பாலியரே, இரஞ்சிதமில்லாத பஞ்சையான விக்கதையால் நீங்கள் கற்றுக்கொள்வதியாதென்று வினவுவீர்களானால் கிஞ்சமெடுத்துக்காட்டுகிறேன்.

அஃதாவது, பாடசாலையென்ற தடாகத்தில் அளவில்லாவின்பத்தைத் தரும் மலராகிய கல்வியைப் பெற்றுக்கொள்ள மட்டிடாதவாகொண்டு ஆசானிடம் பயில்வதென்னும் நீரில் நீந்துகையிற் கொடியைப்போலச் சோம்பலும், வருத்தமும், "மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என்ற மொழியை மறந்து பழிக்காளாகத்திரியும் துட்டப் பிள்ளைகளைப் போலத் திரியக்கூடாத துயரமும், வந்துவருத்தும் அதனாற் சில பாலியர்கள் பிரிவிளையாகிப் போகிறதுமுண்டு. ஐயோ!! மதியீனம் மதியீனம்! விவேகபூஷணன் அநேக விடர்களைச் சகித்து நாடியநாட்டத்தை நிறைவேற்றிவந்ததுபோல நீங்களும் மேற்சொல்லிய இடர்களைச்சகித்துக் கல்விமானாக வேண்டுமென்று இக்கதையின் நோக்கமல்லவோ? ஆம், அவரில்லாவிட்டாலோ? இப்படிக்கு,

சிங்கப்பூர்ச் சாரங்கோங்ரோட்டாராகிய ம. ள. ள. பாலியர்ப்பிரியரின் மாணாக்கனாகிய ஆ. சிதம்பரமேஸ்திரி.

---

## நம்பிக்கை.

ஒருபிள்ளை அந்நிய தேசவழியாய் தனது பிதாவின் கையைப் பிடித்துக்கொண்டு பிதாவுடன் கூடப் பயணம் புறப்பட்டது. அப்பொழுது பிதா பிள்ளையைப்பார்த்து தங்களுடைய வீடு வெகுதூரத்திலிருக்கிறதென்று சொல்ல, பிள்ளையின் மனம் பேதலித்தது. வழியுமோ சற்றுச்சுழற்சியாகவிருந்ததனால் பலமுறையும் பிதாவைநோக்கி நாங்கள் சரியான வழியில் போகிறோமோவென்று பிதாவைக் கேட்பான். அதற்கு பிதா என்னை நம்பென்று மாத்திரமே சொல்லுவார். மறுபடியும் பிள்ளை பிதாவை நோக்கி இந்தச் செங்குத்துமலையில் ஏறிப்போவதினால் எப்படி எங்கள் வீடுபோய்ச் சேருவோமென்று தெரியவில்லையே என்று சொல்லுவான். அப்பொழுது பிதா பிள்ளையே, நீ என் கையைப் பிடித்திருக்கிறாய், விட்டுவிடாதே நல்லாக இறுக்கிப் பிடித்துக்கொள், ஒன்றுக்கும்பயப்படாதே என்று சொல்லுவார்.

இப்படியே பிள்ளையும் பிதாவுமாக நெடுந்தூரம் பயணம்பண்ணிப்போகையில் பிள்ளையின் கால்கள் நடையினால் அலுத்துப்போயிருக்கையில் ஒரு குறுக்குவழியினால் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

இவ்விதமாகவே தேவனும் தமதுபிள்ளைகளை வழிநடத்துகிறார். சிறுபிள்ளை அடிக்கடி மனங்குளம்பிக்கேட்பதுபோல தேவனுடைய பிள்ளைகளும் மனங்குளம்பிக்கொண்டார்கள். எங்களுக்கு என்னசம்பவிக்குமோ தெரியவில்லையே? நாளைக்கு அல்லது வரும் வருஷத்தில் எங்கள்பாடு எப்படியோ தெரியவில்லையே? என்று தங்கள் மனதில் கலக்கங்கொள்ளுவார்கள். பிள்ளைக்குப் பிதா தன்னை நம்பு என்று சொன்னதுபோலத் தேவனும் தன்னை நம்பச் சொல்லுகிறார்.

---

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.